சமத்துவத்தையும், சமுதாய மறுமலர்ச்சியையும் பேணிக் காக்கின்ற வகையிலும், கிராமப் புறங்களில் இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஆதி திராவிடர் குழந்தைகள் கல்வித் தரத்தில் முன்னுக்கு வர வேண்டுமென்பதற்காக ஒரு ஆய்வு நடத்த அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆதிதிராவிட குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அதுபோல ஆதிதிராவிட சமுதாய மக்களுக்குக் குடிநீர், சாலை வசதி, மின் விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்று அக்கறை கொண்டு, மிகத் தீவிரமாக இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 20, திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

20—

வெள்ளப் பள்ளத்தில் மீன்பிடித் துறைமுகம் மற்றும் வழிகாட்டி விளக்கு வசதி ஏற்படுத்துதல்.

*21195—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம், வழிகாட்டி விளக்கு வசதியை மீளனத் துறை மூலம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க தொழில் ரீதியில் சாத்தியக்கூறுகள் இல்லை. வெள்ளப்பள்ளம் அருகே 1 கிலோ மீட்டர் தூரத்தில் வானமாதேவி என்னுமிடத்தில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்பட்டுள்ளதால் வெள்ளப்பள்ளத்தில் மற்று மொரு வழிகாட்டி விளக்கு அமைத்திடத் தேவையில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ நண்பன் என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு, 1991-92 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 8-லே, வெள்ளப்பள்ளத்தில் ஒரு 'ஷோர் ஃபெசிலிட்டி' அமைப்பதற்கான ஒரு கருத்துரு இருக்கிறது என்று சொல்லி இருக்கிறது; 1992-93 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9-ல் "Revised proposal will be sent to Government of India for consideration for providing such facilities at Poompuhar and Vellapallam in Thanjavur district and Kodumunai and Vellavilai in Kanniyakumari district." என்று சொல்லி இருக்கிறது. மீண்டும் இந்த ஆண்டு, 1993-94 ஆம் ஆண்டில் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 10-ல் சென்ட்ரல் கவர்ன்மென்ட் 30.01 இலட்சத்திற்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சேங்ஷன் வழங்கி விட்டதாகவே சொல்லி இருக்கிறது.** என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) இல்லை. இப்போது அமைச்சர் தெரிவித்த கருத்தில் ஏதாவது முரண்பாடு இருக்கிறது என்று சொன்னால், அதைக் குறிப்பிடலாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை,** Budget discussion போது அப்போதே நீங்கள் தெரிவித்திருக்கலாம். இப்போது நீங்கள் கேள்வி நேரத்தில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு. . . .

திரு. பி. வி. இராஜேந்திரன் : அவர் சொன்னபோது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது அதை எழுப்ப முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : இதை எப்படி நீக்குகிறீர்கள்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

HON'BLE MR. SPEAKER: It is not relevant to the answer given by the Hon. Minister here.

THIRU P.V. RAJENDRAN: **

HON'BLE MR. SPEAKER: No Contradictions. You can raise it in some other way but not during the Question Hour.

THIRU P.V. RAJENDRAN: This has been presented by the Hon. Minister in the House.

HON'BLE MR. SPEAKER: But that cannot be discussed during the Question Hour அதனால் வேண்டாம். வேறுவிதமாக இதை நீங்கள் எழுப்பலாமே தவிர, கேள்வி நேரத்தின் போது எழுப்ப முடியாது.

THIRU P.V. RAJENDRAN: Here only I can elicit some information from the Minister.

HON'BLE MR. SPEAKER: During Question Hour. எழுப்ப முடியாது என்று இருக்கிறது. ஆகவே, During Question Hour இதைப் போன்ற பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

THIRU P.V. RAJENDRAN: How can I elicit information.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து வேண்டாம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கின்ற போது குற்றச்சாட்டு கூடாது என்று இருக்கிறது. 1991-லே நடைபெற்றது, நடைபெற்றதா என்று கேளுங்கள், இல்லையா என்று கேளுங்கள்; 1991-லே நடைபெற்றதா, இல்லையா என்று கேளுங்கள். ஆனால், குற்றச்சாட்டுச் சொல்லாமல், ''இப்படிச் சொல்லப்பட்டு இருக்கிறதே, அது நிறைவேற்றப்பட்டதா?'' என்று வேண்டுமானால் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி நீங்கள் கேளுங்கள். அது தான் அமைச்சர் விளக்கம். ஏற்கனவே கொள்கை விளக்கக் குறிப்பில் நீங்கள் இவ்வாறு தெரிவித்து இருக்கிறீர்கள். அது இப்போது எந்த நிலையிலே இருக்கிறது என்று வேண்டுமானால் கேளுங்கள். கேள்வியை அந்த மாதிரி மாற்றிக் கொள்ளலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 அக்டோபர் 26]

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3 ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில், 1992—93 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9-லும், 1993—94 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 10-லும், 1991-92 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 8-லும் வெள்ளப் பள்ளத்திற்கு ஷோர் பெசிலிட்டீஸ் உண்டு என்று சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசுக்கும் தன்னுடைய ரிவைஸ்டு எஸ்டிமேட்டை அனுப்பி 30.01 லட்சத்துக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சேங்க்ஷன் வாங்கி இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், தற்போது அவர்கள் அளித்து இருக்கின்ற விளக்கத்தில் வெள்ளப்பள்ளத்திற்கு அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கு மேல் விளக்கத்தை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 500 கடற்கரை கிராமங்களும் எல்லா அடிப்படை வசதிகளையும் பெற வேண்டும் என்பது நமது புரட்சித் தலைவி இதய தெய்வம் டாக்டர் தமிழக முதல்வர் அவர்களுடைய விருப்பம் ஆகும். அந்த அடிப்படையிலே தான் கடந்த எந்த ஒரு காலத்திலும் எந்த ஒரு அரசும் சிந்தித்திராத வகையிலே, ஒரு தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த 500 கிராமங்களிலும் சாலை வசதி, குடிநீர் வசதி, தங்குதள வசதி, சமுதாயக் கூடங்கள், அங்கு வசிக்கின்ற மக்களுக்கு வீடுகள் போன்ற இன்னும் அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. அத்தோடு மட்டுமல்லாமல், சில கிராமங்களிலே இந்த அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெற வேண்டும் என்பதற்காக 50 சதவீதம் நமது தமிழக அரசினுடைய உதவிக்கு அட்மினிஸ்ரேட்டிவ் அப்ரூவல் கொடுத்து, மீதி 50 சதவீதம் மத்திய அரசினுடைய உதவியைக் கோரி இருக்கின்றோம். அந்தச் சில கிராமங்களில் தான், அங்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறிய வெள்ளப்பள்ளம் என்ற இடம் வருகின்றது. நாங்கள் அட்மினிஸ்ரேட்டிங் அப்ரூவல் கேட்டு மத்திய அரசினுடைய உதவியை கோரி இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு இதுவரையில் அட்மினிஸ்ரேட்டிவ் அப்ரூவல் கொடுக்கவில்லை என்ற செய்தியை வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- அடுத்த துணைக் கேள்வி.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அட்மினிஸ்ரேட்டிவ் சாங்ஷன் தரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார். அவர் இந்த அவையிலே 1993–94 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பை தமிழிலே வாசித்ததாகப் பதிவு செய்யச் சொல்லி, பதிவு செய்யப்பட்ட அவருடைய அறிக்கையில் பக்கம் 10, நான்காவது பாராவில் ரூ. 30.01 இலட்சத்திற்கு இந்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது என்றே சொல்லியிருக்கிறார். இப்போது இப்படிச் சொன்னால்—இப்படிப்பட்ட பதில்கள் எங்களை திருப்திபடுத்துமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்குத் தான் நான் சொல்ல வந்தேன். ஏற்கனவே போடப்பட்டிருந்த அந்த மதிப்பீட்டிற்கு திருத்திய மதிப்பீடு கோரி, அதற்கு அந்த ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்கு அப்ரூவல் கொடுக்கவில்லை என்று தான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்கு அட்மினிஸ்ட்ரேட்டிவ சாங்ஷன் வரவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை. அவர், நாங்கள் ரிவைஸ்ட் எஸ்டிமேட் அனுப்பி இருந்தோம்; அதற்கு இன்னும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் வரவில்லை என்று தான் சொல்கிறார்.

உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடா வினாக்கள் *

(முதல் பட்டியல்)

1—

சேலத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 11899—திரு. எஸ். ஆர். ஜெயராமன் மற்றும் டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

---

* 1 முதல் 18 பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.